
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் மட்டம் 06
இறுதிப் பரீட்சை– 2008/2009
**LWU 1412** – சட்ட வழிமுறை
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 26.03.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I, II ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

பகுதி I – உரோமச்சட்டம்

1. கீழே தரப்பட்ட தரவுகளையும் வரைபடத்தையும் ஆராய்ந்து வினாக்களுக்கு விடை தருக.




செம்பிரோனியஸ் தனது ஒரே வாரிசு எனும் வகையில் ஜஸ்ரீனியன் ஓர் இறுதி விருப்பாவனத்தை ஆக்குகின்றான். கிளோடியஸ் தன்னை குத்தியதன் விளைவாக தான் கடும் காயத்திற்கு உள்ளாகியதால் அவனை வழியுறுத்திலிருந்து விலக்குவதாக தனது இறுதி விருப்பாவனத்தில் கூறியிருந்தான். மேலும் உரோமில் உள்ள தனது வீட்டை தனது மனைவி பிளேவியாவிக்கு கொடுக்கிறான். ஜஸ்ரீனியனுக்கு சொந்தமான ஆதனத்தில் 25% நிரோவிற்காக விடப்பட்டது. ஆனால் ஜுலியட் பற்றி இறுதி விருப்பாவனத்தில் எங்கேனும் குறிப்பிடப்படவில்லை.

இறுதிவிருப்பாவனத்திற்கு ஒரு அடிமை, ஒரு பராயமடையாதவர் மேலும் 5 பேர் சாட்சியாக இருந்தனர்.

பின்னர் இறுதி விருப்பாவனத்திற்கு பின்னிணைப்பு மூலம் (Codicil) கிரோஸியஸ்ஐயும் தனது அடிமை ப்ரூடஸ்ஐயும் பிரதியீட்டு வழியுரிமை வாரிசாக நியமித்து இறுதி விருப்பாவனத்திற்கு மாற்றமொன்றை செய்கின்றான். கிளோடியஸ் 25 வயதாக இருக்கும் போது இறக்கின்றான். அதன் ஒரு வருடத்திற்கு பின்னர் ஜஸ்ரீனியன் இறக்கின்றான்.

I. ஜஸ்ரீனியனின் இறுதி விருப்பாவனத்தின் வலிதுடமையை ஆராய்க. (10 புள்ளிகள்)

II. இறுதி விடுப்பாவனத்தின் வலிதுடமையை ஜுலியட்க்கு வெற்றிகரமாக கேள்விக்குட்படுத்த முடியுமா என விபரிக்க. (05 புள்ளிகள்)

III. இறுதிவிடுப்பாவணம் வலிதற்று போகும் போது ஆதனம் எவ்வாறு பங்கிடப்படும் என்பதை விபரிக்குக. (05 புள்ளிகள்)

2. பின்வரும் ஏதேனும் இரண்டு கூற்றக்களை விபரிக்குக. உமது விடையை மெருகூட்ட உதாரணங்களைப் பயன்படுத்துக.

I. புகழ் அல்லது ஆதனத்தின் சேதத்திற்கு உரோமச்சட்டம் நிவாரணம் அளிக்கின்றது.

II. சேவகமானது அவனது ஆதனத்தை சுதந்திரமாக பிரயோகிப்பதற்கு சொந்தக்காரனுக்குள்ள உரிமையை மட்டுப்படுத்தகின்றது.

III. உரோமச்சட்டம் மற்றும் நவீன சட்டம் ஆகியவற்றின் சட்டமூலங்கள் மிக ஒத்தவை.

*IV.* *Jus gentium* ஆதனத்தின் சொத்துவத்தை (owership) கைமாற்றவதற்கான மிக எளிய வழிமுறையை கொண்டுள்ளது.

3. உரோம பிரஜையான ஜுலியட் லொதாரியோவை திருமணம் செய்யும் உடன்படிக்கையொன்றை செய்துகொண்டாள். அவள் திருமணத்திற்காக அழகான வெள்ளை நிற மணமகள் சட்டையொன்றையும் வைர கழுத்தணியொன்றையும் தனது மிக நண்பியான கிளியோபட்ராவிடம் இருந்து கடனாகப் பெற்றாள். கிளியோபற்றா அழகு நிலையம் ஒன்றை சொந்தமாக வைத்திருந்த போதிலும் அவள் ஜுலியட்டின் பெண் தோழி என்பதாள் தனது பொருட்களை எந்தவித கட்டணம் இன்றி கடனாக கொடுத்தாள். ஜுலியட் தனக்கு முகத்திரை (veil) செய்வதற்காக அவளது சகோதரி வீனஸ்இடம் இருந்து சில சிறந்த ஜரிகைகளையும் (lece) கடனாக பெற்றாள். அவளது திருமண நாளன்று அவளது தந்தை திருமணப்பரிசாக ரோமில் உள்ள வீட்டையும் தாய் ஒரு சோடி வைர காதணிகளையும் கொடுத்தனர். ஜுலியட் திருமண ஆடையுடன் வைர காதணியையும் டயானாவால் (உரோமிற்கு வெளியே உள்ள) பாதுகாப்பிற்கு அவளிடம் கொடுத்துவைக்கப்பட்ட ஏனைய ஆபரணங்களுக்குப் பொருத்தமான இருந்த கழுத்தணி மற்றும் வைரகையணி என்பவற்றை அணிந்தாள்.

திருமண வரவேற்பின் போது ஜீலியட் தனது கணவன் லொதாரியோவிற்கு உரோமிலுள்ள வீட்டை பகிரங்கமாக பரிசளித்தாள். இராப்போசணத்தின் போது ஒரு கோப்பை சிவப்பு திராட்சைப்பழச்சாற்றை (Red wine) தனது திருமண ஆடைமீது ஊற்றிக்கொண்டதால் அது அதில் நிரந்தரக் கறையை எற்படுத்தியது. ஜுலியட் பிரியாவிடை ஆடையை அணியச்சென்ற பொது தனது காதணிகளை கழற்றி ஆடைமாற்றும் அறை மேசைமீது விட்டுச்சென்றாள். அங்கிருந்து அவை களவாடப்பட்டன. அவளது தேனிலவின் போது ஜுலியட் தனது வைரக்கையணியையும் கழுத்தணியையும் தனது விடுதியில் பாதுகாப்பு

பெட்டகத்தில் பூட்டி வைத்தாள். எப்படியோ பாதுகாப்பு பெட்டகத்தின் பூட்டு உடைக்கப்பட்டு அணிகலங்கள் திருடப்பட்டன.

ஜூலியட்டினால் செய்து கொள்ளப்பட்ட பலதரப்பட்ட நடைவடிக்கைகளையும் அந்நடவடிக்கைகளினால் ஏற்பட்ட விளைவுகளை முந்நிலைப்படுத்தி மேற்தரப்பட்ட நிகழ்வுகளின் சட்டவிளைவினை ஆராய்க.

4 உரோம குடும்பத்தைச் சேர்ந்த alieni Juris அங்கத்தவரான ஒருவர் அவன் அல்லது அவள் தனது வாழ்க்கையில் அனைத்து விடயங்களிலும் கடுமையான மட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராவர்.

மேற்தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான உதாரணங்களுடன் ஆதாரப்படுத்தி உமது விடையை விபரிக்குக.

## பகுதி 11 – சட்டவழிமுறை

5. 'சின்ன சூட்டான்' என்பது தூரப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் சூடானின் பழங்குடி வம்சத்தினரை கிராம வாசிகளாகக்கொண்ட ஒரு கிராமமாகும். திருமணங்கள் தேவாலயத்திலோ அல்லது மணவறை சடங்குகளுடனோ நாடுமுழுவதும் கொண்டாடப்பட்டு வந்த போதிலும் சின்ன சூடான் கிராமத்தவர் வித்தியாசமான திருமண அணுகுமுறையை கையாண்டனர். மலர்களுடன் கூடிய மாலையுடன் மணமகன் வரவேற்கப்பட அவரைத்தொடர்ந்து மணமக்களுக்காக மெழுகுதிரி ஏற்றி பிரார்த்திக்கும் பெண்கள் அணிவகுப்பர். பின்னர் மணமக்கள் நிறைகுடத்திற்கு முன்னாள் குடையின் கீழ் தமது பெற்றோரின் ஆசீர்வாதத்திற்காக அமர்ந்திருப்பர். பின்னர் அவர்கள் தமது வீட்டை அடைவதோடு அங்கு முட்டை உடைக்கும் சடங்கும் தும்புத்தடி எரிக்கும் சடங்கும் தொடரும் (தீய பழக்கங்களை இல்லா தொழிக்கும் முகமாக). அதன் பின்னர் கணவன் வீட்டுக்கு வர அனுமதிகோருவர். அங்கு அவர்கள் திறந்த வெளியில் வாசனையூட்டி சமைக்கப்பட்ட கோழி இறைச்சியை பகிர்ந்துண்பர். இறுதியாக அதிக இனிப்புவகை, நாணயங்கள் மற்றும் அரிசி என்பவற்றால் மணமக்கள் தூவப்படுவர்.

அண்மையில் அரச உத்தியோகத்தர்கள் கிராமத்திற்கு வருகை தந்ததுடன் அனைத்து சோடிகளுக்கும் அவர்கள் தேவாலய அல்லது மணவறை சடங்குமுறையை பின்பற்றாததால் அவர்கள் சட்டப்படி திருமணம் செய்யாதவர்கள் என அறிவித்தனர். 85 வயதான மேரி தனது திருமணமும் அதே முறையைப் பின்பற்றி நடந்ததாகவும் அத்துடன் தான் இளமையாய் இருந்த போது நடந்தேறிய அது போன்ற திருமணங்களையும் அவர் நினைவுகூர்ந்தார். 90 வயதான பீட்டரும் தனது திருமணமும் அத்தகைய சடங்குமுறைக்கமைய நிகழ்ந்ததாகவும், சூடானில் இருந்து வந்த தமது முன்னோர் தமக்கு கையளித்த பாரம்பரிய சடங்குகள் அவை எனவும் இன்னும் கூட திருமண சடங்குமறைகள் அப்படியே அங்கு இருப்பதாகவும் தனது தந்தை கூறியதாக அவர் கூறினார். மேலும் ஓர் கிராம முதியவரான சைமன் கூறுகையில் அவர் தேவாலய சடங்குமுறையை பின்பற்றிய போதிலும் அவர் பாரம்பரிய திருமணச்சடங்கையும் பின்பற்றியதாகவும் காரணம் அப்பகுதி கிராமத்தவர்களால் அது அங்கீகரிக்கப்படாமல் போகும் என தான் எண்ணியதாலோ அல்லது இத்தகைய சடங்குகளை பின்பற்றாது விட்டால் முறையாக திருமணம் செய்யவில்லை என தான் எண்ணியதாலோ ஆகும் என அவர் கூறினார்.

சின்ன சூடான் கிராமத்தவர் தமது உள்ளூர் வழக்காற்றுப்படி தாம் இருப்பதால் தமது திருமணங்கள் வலிதானவை என தம்மால் நிரூபிக்க முடியுமா என உமது அறிவுரையை நாடுகின்றார்.

அவர்களுக்கு அறிவுரை வழங்குக.

6. “நீதிபதியானவர் ஒரு வழக்கை தீர்க்கும் போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டி எதும் இல்லை”. தனது சொந்த தற்துணிபதிகாரத்தின் மீது தீர்மானிக்க அவருக்கு முழுமையான சுதந்திரம் உண்டு.

மேற்தரப்பட்ட கூற்றின் வலிதுடமையை ஆராய்க.

7. சமீப ஆண்டு காலமாக பாரிய பாடசாலை போட்டியில்(big match) பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் மற்றும் அதை ஒத்த நடவடிக்கைகளில் பலாத்காரத்தின் அளவு அதிகரித்திருப்பது அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அவற்றில் சில பாரிய காயங்களுக்கும் இறப்புக்கும் இட்டுச்சென்றன.

அத்துடன் அநேகமான பாடசாலை மாணவர்கள் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் போது மது போதையின் உந்துதலாலே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பது அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆகவே “விஸ்கீ, பிரண்டி சாராயம் அல்லது ஏனைய மதுபானவகைகளையும் மதுபாண நிலையம் கடைகள், சுப்பர் மார்க்கட் அல்லது ஏனைய இடங்களில் 18 வயதிற்கு குறைந்தோருக்கு விற்பனை செய்தல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும் என பாராளுமன்றத்தால் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

நாட்டின் பிரசித்திபெற்ற இரு பாடசாலைகளுக்கிடையேயான “எருதுகளின் போர்களம்” எனும் பெரிய விளையாட்டுப்போட்டியின் போது பெஸ்டா அன் கோ வானது விளையாட்டுப்போட்டி நடை பெற்றுக் கொண்டிருக்கும் மைதானத்தில் கூடாரம் ஒன்று அமைத்து விளையாட்டில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு (Bear) பியர் ஐ விற்பனை செய்ய ஆரம்பித்தது. கிறீன் அன்ட் வைட் கோ. வானது மைதானத்திற்கு அருகில் வண்டியை(van) நிறுத்தி ஒரேஜ் மற்றும் செயற்கை பிரெண்டி சுவையூட்டப்பட்ட ஐஸ் கோப்பியை விற்பனை செய்ய ஆரம்பித்தது.

கசிப்பு விற்பனை செய்யும் ஒரு கூட்டமும் சில மரங்களுக்கிடையே மறைத்து பீப்பாக்களினால் கசிப்பு விற்பனையை ஆரம்பித்தனர். காவல்துறையினர் அப்பகுதியை முற்றுகையிட்டதோடு பென்டா அன் கோ, கிறீன் அன் வைட் கோ மற்றும் கசிப்பு விற்பனையாளர்களை கண்டு பிடித்தது. மேற்தரப்பட்ட சட்டத்தின்படி அதன் கீழ் அவர்களை குற்றஞ்சாட்ட முடியுமா என்பது தொடர்பில் பொலீசார் உமது உதவியை நாடுகின்றனர். நியதிச்சட்ட பொருள் கோடல் கொள்கைகளின் ஏற்புடமையை பிரயோகித்து காவல்துறைக்கு அறிவுரை வழங்குக.

8. கீழே தரப்பட்டிருக்கும் கூற்றுக்களில் எவையேனும் இரண்டினது வலிதுடமை பற்றி ஆராய்க.

I. சட்டமானது அச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிகழும் சம்பவங்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாக வேண்டும்.

II. விளைவுகள் நியாயமற்றதாகவோ அல்லது கடுமையானதாகவோ இருந்தாலும் பரவாயில்லை இலங்கையின் நீதிபதிகள் சட்டத்தைப்பின்பற்ற பிணிக்கப்பட்டுள்ளார்கள்.

III. ஒரு முன்னைய வழக்கை மேவுதல் மற்றும் வேறுபடுத்திக் காட்டுதல் ஆகிய இரண்டு கருத்தேற்புக்கும் இடையே முக்கிய வித்தியாசங்கள் எதுவுமில்லை.

IV. சட்டவல்லுனர்களின் எழுத்தாக்கம் முஸ்லீம் சட்டத்தின் ஒரு முக்கிய பாகமாகும்.

(பதிப்புரிமையுடையது)